14th March 1960]

Coleroon covered a period of 10 years from 1st October 1948. The question of revision of the agreement and its renewal is under consideration. The terms of the revised agreement have not yet been finalised.

SRI S. LAZAR : ஸார், இந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கின்ற போது அங்கே எடுத்துக்கொள்ளக்கூடிய தண்ணீர் அரசாங்கத்தின் தண்ணீராக இருக்கிறது. வழி நெடுக பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளுக்கும் தண்ணீர் கொடுக்கக்கூடிய முறையிலே ஒப்பந்த கண்டிஷன்களைச் சேர்த்து அதற்கான தொகை வேண்டுமானாலும் அரசாங்கத்திற்குச் செலுத்திவிட வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தைச் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் கொடுக்கும்போது அரசாங்கம் ரொம்ப கவனமாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. கீழே இருக்கும் அயக்கட்டுக்காரர்களைப் பாதிக்கக்கூடாது. கனம் அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் மற்ற விவரங்களைக் கூறுகிறேன்.

Government Textile Institute

* 355 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount received as compensation from the Government of India for taking over the Government Textile Institute, Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : No compensation has been received from the Government of India so far, for taking over the Government Textile Institute, Madras.

SRI A. A. RASHEED : May I know the reasons for handing over the Madras Textile Institute to Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN : Government of India wanted to run it as an All-India Institute.

SRI A. A. RASHEED : May I know whether students of Madras will get priority in admission to this institute?

THE HON. SRI R. VENKATARAMAN : They will also get admission. Naturally more number of people from Madras State will get admission here.

Collectors' conference.

* 356 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any decisions have been taken at the Collectors' conference held on 6th November 1959 at Madras regarding the implementation of the Panchayats Act and the District Development Councils Act; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The programme of implementation of the Madras District Development Councils Act, 1958, and the Madras Panchayats Act, 1958, drawn up with reference to the discussions at the departmental meeting of the District Collectors has been placed on the table of the House under G.O. No. 2013, L.A., dated the 28th November 1959.

SRI N. K. PALANISAMI : ஸார், இன்னும் பல கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்படவில்லை. இந்த பஞ்சாயத்துகள் எல்லா கிராமங்களிலும் ஏற்படுத்தப்படும் என்று திட்ட வட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லா கிராமங்களிலும் இந்த வருஷத்திற்குள்ளாக பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்படும். இந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முதல் படியாக 75 வட்டாரங்களில் எடுத்துக்கொள்ளப்படும் என்று பட்ஜட் உரையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் தொடர்ந்து மற்றப் பகுதிகளிலும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை படிக்காமல் இருந்தால் அதைப் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : 1960-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு பஞ்சாயத்து போர்டு தலைவர்களே உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ? அல்லது பஞ்சாயத்திலிருந்து டெலிகேட்டுகள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இருக்கும் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குத் தனியாக ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றிருக்கிறது. இதை ஏதாவது மாற்றலாம் என்று கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : பஞ்சாயத்து சட்டத்தின் கீழும், மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டத்தின் கீழும் பிறப்பிக்க வேண்டிய விதிகள் எப்போது பிறப்பிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 30—11—1959-ல் பிறப்பிக்கப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : 30—11—1959-ல் பிறப்பிக்கப்பட்டது தேர்தல் சம்பந்தமாக மட்டுந்தான். இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட வேண்டிய மற்ற விதிகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கவனித்து சொல்லுகிறேன். இங்கு கொடுத்திருக்கும் தகவல் பிரகாரம் The notification was issued on 30th November 1959. Perhaps it was before the formation of the Development Councils.